**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் MCOP :** 64/2019

2023ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18ம் நாள் மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் (PW1) | : உமாதேவி | | தொழில் | : |
| தந்தை/ கணவர் பெயர் | : | | சமயம் | : |
| கிராமம் | : | | சாதி | : |
| தாலுகா | : | | வயது | : |

**முதல் விசாரணை** – 18.08.2023

நான் இந்த மனுவின் மனுதாரர். ஏற்கனவே என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இன்று எனது சாட்சியத்தின் கூடுதல் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**2 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை** – 18.08.2023

எனக்கு விபத்து எப்படி ஏற்பட்டது என நேடியாக தெரியாது என்றால், சரிதான். எனது மனுவிலும், நிரூபணவாக்குமூலத்திலும் இரண்டு வாகனங்களும் விபத்திற்கு காரணம் என்றும், இரண்டு வாகனங்களின் உரிமையாளர்களும், காப்பீட்டு நிறுவணங்களும் இழப்பீடு தரவேண்டும் என கோரியுள்ளேன் என்றால், சரிதான். விபத்து சமயத்தில் நான்குவழிசாலையில் எனது கணவர்தான் வாகனங்கள் வரக்கூடிய சாலையில் சாலைவிதிகளுக்கு முரணாக எதிர்திசையில் சைக்கிளை ஓட்டிவந்து

விபத்தை ஏற்படுத்தினார் என்றால், சரியல்ல. 3ம் எதிர்மனுமாரர் சாலைவிதிகளை கடைபிடிக்காமல் சாலையின் இடதுபுறம் சிக்னல் எதுவும் இல்லாமல் கவனக்குறைவாக வாகனத்தை நிறுத்தியிருந்ததால் விபத்திற்கு அவரும் காரணம் என்றால், சரிதான். நான் எனது நிரூபணவாக்குமூலத்தில் எனது கணவர் என்ன வேலைசெய்தார் என்ன வருமானம் ஈட்டினார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல. 5ம் மனுதாரர் பெயர் ம.சா.ஆ.14 வாரிசுசான்றிதழில் இல்லை என்றால், சரிதான், அது எனது மாமனார். விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரரின் வாகனஓட்டுநர்தான் காரணம் என்பதால், 1மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு தர கடமைப்பட்டவர்அல்ல என்றால், சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கேட்டுள்ள இழப்பீட்டுத்தொகை அதிகப்படியானது என்றால், சரியல்ல.

4ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.